# தமிழ்ச் செய்யுள் திரட்டு

## முதற் பருவம் மற்றும் இரண்டாம் பருவம்

பட்ட வகுப்பு பாடத்திட்டத்திற்குரியது

**Under the State Educational Policy (SEP-2024)**

**(For All Arts & Science Students)**

**TAMIL CHEIYUL THIRATTU - I**

**Tamil Poetry Selections**

**I & II Semester**

**BA/ Bsc / BCA /Bsc(fad) BPA/BVA/BSW-TAMIL LANGUAGE**

**BENGALURU CITY UNIVERSITY**

## தமிழ்ப் பாடநூல் குழு

# BENGALURU CITY UNIVERSITY

**Bengaluru-560001.**

# TAMIL CHEIYUL THIRATTU - I

**A Prescribed Tamil Text book (Poetry Selections) for BA/ Bsc / BCA /Bsc(fad) BPA/BVA/BSW Degree Courses ( I & II Semester) For all Arts and Science Students**

**Chief Editor: Prof.U.Basavaraju**
**Member, Board of Studies in Tamil & Malayalam, Bengaluru City University & Professor of Tamil, Maharani Cluster University Bengaluru-560001. (Rtd)**

**Edited by: Prof.I. Arockia Mary**
**HoD of Tamil, (Rtd)**
**St.Joseph' s college ( Autonomous) Lalbagh road,**
**Bengaluru-560027.**

**Published by:**
**Bengaluru City University, Bengaluru-560001**
**© Bengaluru City University.**
**Pp.**
**First Print - 2024**

தலைமைப் பதிப்பாசிரியர்
பேரா. உ. பசவராசு.

வெளியீடு:
பெங்களூரு நகரப் பல்கலைக் கழகம்.

# FOREWORD

I am happy to present the new edition of the Tamil text book **TAMIL CHEIYUL THIRATTU –**I For the **I**st and **II**nd semester **BA/ Bsc / BCA /Bsc(fad) BPA/BVA/BSW** degree courses of Bengaluru City University (BCU) published by Bengaluru City University. I hope this new textbook will be a rewarding experience for both Teachers and students. Board of studies – Tamil, BCU has taken this initiative of selecting, editing and designing this textbook. I thank the Chief Editor, Editor, members of the text book committee and the staff of Bengaluru City University for publishing this book.

**Prof. Lingaraja Gandhi**
Vice-Chancellor
Bengaluru City University

# Preface

As per the request of the Board of Studies in Tamil, Bengaluru City University is bringing out the Tamil Text Book of Poetry **"Tamil Cheiyul Thirattu-I** for the **I**$^{st}$ and **II**$^{nd}$ semester **BA/Bsc/BCA/Bsc(fad)BPA/BVA/BSW (For all Arts and Science Students)** degree courses of Bengaluru City University (BCU)

The Tamil Students of this University will be very much benefited by this Publication.

I thank our University Vice-Chancellor Prof. Lingaraja Gandhi and Registrar of Bengaluru City University for their Consistent support for this publication.

I thank the Members of Board of Studies for their efforts in the preparation of this textbook.

**Prof/Dr.Jyothi Venkatesh**
Chairperson
Board of Studies in Tamil
& Malayalam,
Bengaluru City University.

# Members of the Board of Studies in Tamil

1. **Prof. U. Basavaraju** Chief Editor
Member, Board of Studies in
Tamil and Malayalam,
Bengaluru City University and
HoD of Tamil, (Rtd)
Maharani Cluster University,
Bengaluru-560001.

2. **Prof. I. Arockia Mary** Editor
HoD of Tamil,(Rtd)
St. Joseph's University,
Lalbagh Road, Bengaluru-560027

# முன்னுரை

கர்நாடக மாநிலத் தலைநகராம் பெங்களூருவில் அமைந்து கலை ,அறிவியல் , வணிகம், நிர்வாகவியல் ,கணினி மற்றும் பல்வேறு துறைக் கல்வியை வழங்கி வரும் பெங்களூரு நகரப் பல்கலைக்கழகத்தின் செயல்திறன் பல்வேறு வகைகளில் வளர்ந்து வருகிறது.

மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வளர்ச்சியை உள்வாங்கிக் காலத்திற்குத் தகுந்தவாறு இப்பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. -அது தமிழ்ச் செய்யுள் திரட்டு -1 ஆக வெளிவந்துள்ளது. இது **BA/ Bsc / BCA /Bsc(fad) BPA/BVA/BSW** பட்ட வகுப்பிற்குரிய முதல் பருவம் மற்றும் இரண்டாம் பருவ மாணாக்கர்களுக்கு உரியது.

கர்நாடகத்தில் தமிழ் பயிலும், பயில வரும் அண்டை மாநில மாணவர்கள் அனைவருக்கும் பெங்களூரு நகரப் பல்கலைக்கழக பாட நூல் குழுவினரால் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் உருவாகப் பல வகைகளிலும் உதவிய பாடநூல் குழுவினருக்கும், **புலவர். கார்த்தியாயினி** அம்மையார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களும், ஆசிரியர்களும் இந்நூலைப் பயன்படுத்திப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பேரா. உ. பசவராசு.**
தலைமைப் பதிப்பாசிரியர்
பாடநூற்குழு
பெங்களூரு நகரப் பல்கலைக்கழகம்.

# தமிழ்ச் செய்யுள் திரட்டு - I

முதற் பருவம் மற்றும் இரண்டாம் பருவம்

பட்ட வகுப்பு பாடத்திட்டத்திற்குரியது.

**Under the State Educational Policy (SEP-2024)**

**(For all Arts and Science Students)**

**TAMIL CHEIYUL THIRATTU - I.**

**Tamil Poetry Selections.**

**I & II Semester.**

**BA/ Bsc / BCA /Bsc(fad) BPA/BVA/BSW / TAMIL LANGUAGE**

**BENGALURU CITY UNIVERSITY**

## தமிழ்ப் பாடநூல் குழு.

# BENGALURU CITY UNIVERSITY.

**Bengaluru-560001.**

# பொருளடக்கம்


| முதற் பருவம் | இரண்டாம் பருவம் |
|---|---|
| **அலகு- I - செய்யுள்**<br>**புறநானூறு**<br>1 சோழன் நல்லுருத்திரன்-190<br>2. குறுங்கோழியூர் கிழார்-20<br>3. பிசிராந்தையார்-67<br>4. பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்-72<br>5. பெருந்தலைச் சாத்தனார்-165.<br>6. வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்-125<br>7. சிறுவெண்டேரையார்-362<br><br>**அலகு - II - செய்யுள்**<br>**நெடுநல்வாடை** (முழுவதும்)<br><br>**அலகு- III- செய்யுள்**<br>**பழமொழி நானூறு-**<br>கல்வி -4,5 6<br>கல்லாதார் -11,12,15<br>ஒழுக்கம் - 34,35,38<br>இன்னா செய்யாமை - 44,45,49<br>வெகுளாமை - 57,58,59<br><br>**அலகு-IV - இலக்கணம்**<br>**எழுத்து இலக்கணம்**<br><br>**அலகு- V - சிறுகதைத் தொகுப்பு**<br>**கானல் நீர் கனவுகள்**<br><br>**( அலகு-5க்கு உரிய நூலை மட்டும் தனியாக வாங்கிப் படிக்கவும். )**<br><br>. | **அலகு - I - செய்யுள்**<br>**சிலப்பதிகாரம்-**<br>கனா திறம் உரைத்த காதை<br><br>**அலகு-II செய்யுள் -**<br>**பெருங்கதை-**<br>பந்தடி கண்டது.<br><br>**அலகு- III- செய்யுள்**<br>**திருவாசகம்-**<br>திருவெம்பாவை- 1 - 4<br>திருக்கோத்தும்பி- 1 - 4<br>குயில் பத்து- 1 - 4<br><br>**அலகு -IV - இலக்கணம்**<br>**சொல் இலக்கணம்**<br>1.சொல் விளக்கம்<br>2.பகுபதம், பகாபதம்<br>3.பெயர்ச்சொல்,வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.<br>4.இயற்சொல் , திரிசொல்,<br>5.திசைச்சொல், வடசொல்<br>6 தொகைச் சொற்கள்<br><br>**அலகு- V - நாவல்**<br>**வேரில் பழுத்த பலா**<br><br>**(அலகு-5க்கு உரிய நூலை மட்டும் தனியாக வாங்கிப் படிக்கவும்).** |

# முதற் பருவம்

## புறநானூறு

இந்நூல் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. எனவே புறநானூறு என்ற பெயரைப் பெற்றது. மக்கள் எய்த வேண்டிய உறுதிப் பொருள்களைத் தமிழர் அகம், புறம் எனும் இரு பிரிவுகளாக வகுத்துள்ளனர். அகத்தில் இன்பமும் புறத்தில் அறம், பொருள்,வீடு என்பனவும் அடங்கும். கடைச்சங்க காலத்தில் வழங்கி வந்த செய்யுட்களையும் அக்காலத்தில் புதியனவாக எழுந்த பாடல்களையும் தொகுத்த சான்றோர்கள் அவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என வகைப்படுத்தினர். புறனாநூறு என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

இந்நூல் அக்காலத்தில் நம் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய சேர, சோழ ,பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர்கள் , குறுநில மன்னர்கள், வள்ளல்கள், அமைச்சர்கள், தானைத்தலைவர்கள் வீரர்கள், புலவர்கள் முதலியோர்களின் வரலாறுகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. அக்கால மக்களின் வீரம், கொடைப்பண்பு, பழக்க வழக்கங்கள், அரசியல், போர்முறைகள் போன்றவையும் இந்நூலால் நன்கு புலப்படுகின்றன.

இந்நூலில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் அனைவரும் ஒரு காலத்தவரோ ஒரு இடத்தவரோ ஒரு குலத்தவரோ அல்லர். பாடியவர்களில் அரசர், அந்தணர், வணிகர், பெண்கள் எனப் பலரும் உள்ளனர்.

அகப் பாடல்கள் , காதல் வாழ்வையும் புறப்பாடல்கள் வெளியுலக வாழ்வான வீரம், போர், வெற்றி, ஈகை, கல்வி, புகழ் முதலியவற்றையும் உணர்த்துகின்றன. இந்நூலில் உள்ள ஏழு பாடல்கள் இங்குப் பாடமாக அமைந்துள்ளன.

**1**

விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்
வல்சி கொண்டு, அளை மல்க வைக்கும்
எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்
வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ!

கடுங் கண் கேழல் இடம் பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,
பெரு மலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,
இருங் களிற்று ஒருத்தல் நல் வலம் படுக்கும்
புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து
உரனுடையாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உள ஆகியரோ!

**திணை; பொதுவியல், துறை: பொருண்மொழிக்காஞ்சி,**

**சோழன் நல்லுருத்திரன் பாட்டு**.

**2**

இரு முந்நீர்க் குட்டமும்,
வியல் ஞாலத்து அகலமும்,
வளி வழங்கு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை,
அறிவும், ஈரமும், பெருங் கண்ணோட்டமும்:
சோறு படுக்கும் தீயோடு
செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார், நின் நிழல் வாழ்வோரே;
திருவில் அல்லது கொலை வில் அறியார்;
நாஞ்சில் அல்லது படையும் அறியார்;
திறன் அறி வயவரொடு தெவ்வர் தேய, அப்
பிறர் மண் உண்ணும் செம்மல்! நின் நாட்டு

வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,
பகைவர் உண்ணா அரு மண்ணினையே;
அம்பு துஞ்சும் கடி அரணால்,
அறம் துஞ்சும் செங்கோலையே;
புதுப் புள் வரினும், பழம் புள் போகினும்,
விதுப்புறவு அறியா ஏமக் காப்பினை;
அனையை ஆகல்மாறே,
மன் உயிர் எல்லாம் நின் அஞ்சும்மே.

**திணை: வாகை; துறை: அரச வாகை**

**சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைக் குறுங் கோழியூர் கிழார் பாடியது.**

**3**

அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடு கொள் வென்றி அடு போர் அண்ணல்
நாடு தலை அளிக்கும் ஒள் முகம் போல,
கோடு கூடு மதியம் முகிழ் நிலா விளங்கும்
மையல் மாலை, யாம் கையறுபு இனைய,
குமரிஅம் பெருந் துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவைஆயின், இடையது
சோழ நல் நாட்டுப் படினே, கோழி
உயர் நிலை மாடத்து, குறும்பறை அசைஇ,
வாயில் விடாது கோயில் புக்கு, எம்
பெருங் கோக் கிள்ளி கேட்க, 'இரும் பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்

இன்புறு பேடை அணிய, தன்
அன்புறு நன் கலம் நல்குவன் நினக்கே.

**திணை: பாடாண் திணை; துறை: இயன்மொழி.**

**கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது.**

**4**

'நகுதக்கனரே, நாடு மீக்கூறுநர்;
இளையன் இவன்' என உளையக் கூறி,
'படு மணி இரட்டும் பா அடிப் பணைத் தாள்
நெடு நல் யானையும், தேரும், மாவும்,
படை அமை மறவரும், உடையம் யாம்' என்று
உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கி,
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அருஞ் சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது,
'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி,
குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே.

**திணை: காஞ்சி, துறை: வஞ்சினக் காஞ்சி**

**பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு.**

**5**

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே;
துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே;
தாள் தாழ் படு மணி இரட்டும், பூ நுதல்,
ஆடு இயல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடு இல் நல் இசை வய மான் தோன்றலைப்
பாடி நின்றனெனாக, 'கொன்னே
பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என
நாடு இழந்ததனினும் நனி இன்னாது' என,
வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,
தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்;
ஆடு மலி உவகையொடு வருவல்,
ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே.

**திணை: பாடாண்; துறை: பரிசில் விடை.**

**தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு, அவன் தன் வாள் கொடுப்பக் கொண்டு வந்து, இளங் குமணற்குக் காட்டி, பெருந்தலைச் சாத்தனார் பாடியது.**

**6**

பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன,
நெருப்புச் சினம் தணிந்த நிணம் தயங்கு கொழுங் குறை,
பரூஉக் கள் மண்டையொடு, ஊழ் மாறு பெயர

உண்கும், எந்தை! நிற் காண்கு வந்திசினே,
நள்ளாதார் மிடல் சாய்த்த
வல்லாள! நின் மகிழ் இருக்கையே.
உழுத நோன் பகடு அழி தின்றாங்கு
நல் அமிழ்து ஆக, நீ நயந்து உண்ணும் நறவே;
குன்றத்து அன்ன களிறு பெயர,
கடந்து அட்டு வென்றோனும், நிற் கூறும்மே;
'வெலீஇயோன் இவன்' என,
'கழல் அணிப் பொலிந்த சேவடி நிலம் கவர்பு
விரைந்து வந்து, சமம் தாங்கிய,
வல் வேல் மலையன் அல்லன் ஆயின்,
நல் அமர் கடத்தல் எளிதுமன், நமக்கு' எனத்
தோற்றோன்தானும், நிற் கூறும்மே,
'தொலைஇயோன் இவன்' என,
ஒரு நீ ஆயினை பெரும! பெரு மழைக்கு
இருக்கை சான்ற உயர் மலைத்
திருத் தகு சேஎய்! நிற் பெற்றிசினோர்க்கே.

**திணை: வாகை; துறை: அரச வாகை.**

**சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழி, சோழற்குத் துப்பாகிய தேர்வண்மலையனை வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது.**

**7**

ஞாயிற்று அன்ன ஆய் மணி மிடைந்த
மதி உறழ் ஆரம் மார்பில் புரள,

பலி பெறு முரசம் பாசறைச் சிலைப்ப,
பொழிலகம் பரந்த பெ................
.......................குும விசய வெண் கொடி
அணங்கு உருத்தன்ன கணம் கொள் தானை,
கூற்றத்து அன்ன மாற்று அரு முன்பின்,
ஆக் குரல் காண்பின் அந்தணாளர்
நான்மறைக் குறி .......................... யின்
அறம் குறித்தன்று; பொருள் ஆகுதலின்
மருள் தீர்ந்து, மயக்கு ஒரீஇ,
கை பெய்த நீர் கடற் பரப்ப,
ஆம் இருந்த அடை நல்கி,
சோறு கொடுத்து, மிகப் பெரிதும்
வீறு சான......................... நன்றும்
சிறு வெள் என்பின் நெடு வெண் களரின்,
வாய் வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலும் கூவும் அகலுள் ஆங்கண்,
காடு கண் மறைத்த கல்லென் சுற்றமொடு,
இல் என்று இல்வயின் பெயர, மெல்ல
இடம் சிறிது ஒதுங்கல் அஞ்சி,
உடம்பொடும் சென்மார், உயர்ந்தோர் நாட்டே.

**திணை: பொதுவியல்; துறை பெருங்காஞ்சி.**

**சிறுவெண்டேரையார் பாடியது.**

# நெடுநல்வாடை- நக்கீரர்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரையைச் சேர்ந்த **நக்கீரர்** என்னும் புலவரால் இயற்றப்பட்டதே நெடுநல்வாடை என்னும் நூல். இது சங்கத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இந்நூல் ஆசிரியப்பாவால் ஆன 188 அடிகளைக் கொண்டது. இந்நூலுள் எடுத்தாளப்பட்டுள்ள நிகழ்வுகள் வாடைக்காலத்தில் நிகழ்வதாலும், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இது நீண்ட (நெடு) வாடையாகவும், போர் வெற்றியைப் பெற்ற கூதிர்ப்பாசறையின்கண் இருக்கும் தலைவனுக்கு இஃது ஒரு நல்ல வாடையாகவும் அமைந்தது குறித்தே இது நீண்ட நல்ல வாடை என்னும் பொருளில் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

இஃது ஒரு புறப்பொருள் நூலாகக் கொள்ளப்படினும் இதில் பெருமளவு அகப்பொருள் அம்சங்கள் பொதிந்துள்ளன. இந்நூல் அகப் பொருளையே பேசினாலும் புறப்பொருள் நூல்கள் வரிசையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுவாகத் தமிழ்ப் புலவர்(கள்) தம் அகப் பாடல்களில் தலைவன், தலைவி ஆகியோரின் அடையாளத்தை வெளிப்படுத்தாத கண்ணியத்தைக் காத்து வந்தனர். புறவாழ்வை அனைவருக்கும் கூறலாம். அகவாழ்வை அகிலமே அறியச்செய்வது அறிவுடைமை அன்று என்பது அவர்தம் அறிவுமுடிவாய் இருந்திருக்கிறது. ஆனால் நெடுநல்வாடையில் பாண்டியனின் அடையாளச் சின்னமாகிய வேம்பு நக்கீரரால் சுட்டப்பட்டுள்ளது. ஆகவேதான் தலைவன் பாண்டிய மன்னனாய்க் கொள்ளப்பட்டான். எனவே இந்நூலும் புறப் பொருள் நூலாயிற்று.

**(பாண்டியன் நெடுஞ் செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது)**

**கோவலர் வாடையால் துன்புறுதல்:**

வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,

பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென,

ஆர்கலி முனைஇய கொடுங் கோல் கோவலர்

ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி,

புலம் பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்

நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,

மெய்க் கொள் பெரும் பனி நலிய, பலருடன்
கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க

**கூதிர்க் கால நிலை:**

மா மேயல் மறப்ப, மந்தி கூர,
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி,
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்

**ஊரினது செழிப்பு:**

புன் கொடி முசுண்டைப் பொறிப் புற வான் பூ,
பொன் போல் பீரமொடு, புதல்புதல் மலர;
பைங் காற் கொக்கின் மென் பறைத் தொழுதி,
இருங் களி பரந்த ஈர வெண் மணல்,
செவ் வரி நாரையோடு, எவ் வாயும் கவர
கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்:
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண் மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப;
அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த
வண் தோட்டு நெல்லின் வரு கதிர் வணங்க;
முழு முதல் கமுகின் மணி உறழ் எருத்தின்
கொழு மடல் அவிழ்ந்த குழூஉக் கொள் பெருங் குலை,
நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு,
தெண் நீர்ப் பசுங் காய், சேறு கொள முற்ற;
நளி கொள் சிமைய, விரவு மலர், வியன் காக்

குளிர் கொள் சினைய குரூஉத் துளி தூங்க

**முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்:**

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்,
ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்,
படலைக் கண்ணி, பரு ஏர் எறுழ்த் திணி தோள்,
முடலை யாக்கை, முழு வலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து,
இரு கோட்டு அறுவையர், வேண்டு வயின் திரிதர

**மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்:**

வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்,
மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்,
பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக் கண்,
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின், பைங் கால் பித்திகத்து,
அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந் திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர

**கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்:**

மனை உறை புறவின் செங் கால் சேவல்
இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,

இரவும் பகலும் மயங்கி, கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப;
கடியுடை வியல் நகர்ச் சிறு குறுந் தொழுவர்,
கொள் உறழ் நறுங் கல், பல கூட்டு மறுக;
வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப;
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில் மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,
இருங் காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப,
கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங் கேழ் வட்டம் சுருக்கி; கொடுந் தறி,
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,
வேனில் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை, திரியாது, திண் நிலைப்
போர் வாய் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகு வாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,
பகுவாய்த் தடவில் செந் நெருப்பு ஆர;
ஆடல் மகளிர் பாடல் கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன் குரல் தீம் தொடை,
கொம்மை வரு முலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப;

காதலர்ப் பிரிந்தோர் புலம்ப; பெயல் கனைந்து,
கூதிர் நின்றன்றால்

**அரசியின் அரண்மனை:**

மனை வகுத்த முறை
போதே, மாதிரம்
விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்,
இரு கோல் குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு,
ஒரு திறம் சாரா அரை நாள் அமயத்து ,
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை வகுத்து-

**கோபுர வாயில்:**

ஒருங்கு உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின்,
பரு இரும்பு பிணித்து, செவ்வரக்கு உரீஇ,
துணை மாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு,
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து,
போது அவிழ் குவளைப் புதுத் பிடி கால் அமைத்து
தாழொடு குயின்ற, போர் அமை புணர்ப்பின்,
கை வல் கம்மியன் முடுக்கலின், புரை தீர்ந்து,
ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை,
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,
குன்று குயின்றன்ன, ஓங்கு நிலை வாயில்,

**முற்றமும் முன்வாயிலும்:**

திரு நிலை பெற்ற தீது தீர் சிறப்பின்,
தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,
நெடு மயிர் எகினத் தூ நிற ஏற்றை
குறுங்கால் அன்னமோடு உகளும் முன் கடை,

**அரண்மனையில் எழும் ஓசைகள்:**

பணை நிலை முனைஇய பல் உளைப் புரவி
புல் உணாத் தெவிட்டும் புலம்பு விடு குரலொடு,
நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து,
கிம்புரிப் பகு வாய் அம்பணம் நிறைய,
கலிழ்ந்து வீழ் அருவிப் பாடு விறந்து, அயல
ஒலி நெடும் பீலி ஒல்க, மெல் இயல்
கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை,
நளி மலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்

**அந்தப்புரத்தின் அமைப்பு:**

யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து,
பரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி,
அறு அறு காலைதோறு, அமைவரப் பண்ணி,
பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க;
பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது,
ஆடவர் குறுகா அருங் கடி வரைப்பின்,
வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு

வில் கிடந்தன்ன கொடிய, பல் வயின்,
வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,
மணி கண்டன்ன மாத் திரள் திண் காழ்,
செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ் சுவர்,
உருவப் பல் பூ ஒரு கொடி வளைஇ,
கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்

**அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்:**

தச நான்கு எய்திய பணை மருள் நோன் தாள்,
இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரி நுதல்,
பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து,
சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்
கூர் உளிக் குயின்ற, ஈர் இலை இடை இடுபு,
தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்
புடை திரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,
உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து,
பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்

**கட்டிலின்மேல் அமைந்த படுக்கை:**

மடை மாண் நுண் இழை பொலிய, தொடை மாண்டு,
முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,
புலிப் பொறிக் கொண்ட பூங் கேழ்த் தட்டத்துத்
தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,
ஊட்டுறு பல் மயிர் விரைஇ, வய மான்

வேட்டம் பொறித்து, வியன் கண் கானத்து
முல்லைப் பல் போது உறழ, பூ நிரைத்து,
மெல்லிதின் விரிந்த சேக்கை

**படுக்கையின்மேல் அரசி மலரணையில் வீற்றிருத்தல்:**

மேம்பட,
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூ மடி விரித்த சேக்கை,
ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடு வீழ் தாழ, துணை துறந்து,
நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி,
நெடு நீர் வார் குழை களைந்தென, குறுங் கண்
வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்,
பொலந் தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து,
வாளைப் பகு வாய் கடுப்ப வணக்குறுத்து,
செவ் விரல் கொளீஇய செங் கேழ் விளக்கத்து,
பூந் துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்,
அம் மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு,
புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்

**சேடியரும் செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்:**

தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்,

அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ் முலை,
வம்பு விசித்து யாத்த, வாங்கு சாய் நுசுப்பின்,
மெல் இயல் மகளிர்-நல் அடி வருட;
நரை விராவுற்ற நறு மென் கூந்தல்
செம் முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி,
'இன்னே வருகுவர் இன் துணையோர்' என,
உகத்தவை மொழியவும்

**தலைவியின் வருத்த மிகுதி:**

ஒல்லாள், மிகக் கலுழ்ந்து
நுண் சேறு வழித்த நோன் நிலைத் திரள் கால்,
ஊறா வறு முலை கொளீஇய, கால் திருத்தி,
புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப் பனி,
செவ் விரல் கடைக் கண் சேர்த்தி, சில தெறியா,
புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு
இன்னா அரும் படர் தீர, விறல் தந்து
,இன்னே முடிகதில் அம்ம

**பாசறையில் அரசன் நிலை:**

மின் அவிர்
ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை
நீள் திரள் தடக் கை நிலமிசைப் புரள,
களிறு களம் படுத்த பெருஞ் செய் ஆடவர்,
ஒளிறு வாள் விழுப் புண் காணிய, புறம் போந்து,
வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி,
தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல்
பாண்டில் விளக்கில், பரூஉச் சுடர் அழல,
வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்,
மணி புறத்து இட்ட மாத் தாள் பிடியொடு
பருமம் களையாப் பாய் பரிக் கலி மா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,
புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ,
வாள் தோள் கோத்த வன்கண் காளை
சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,
நூல் கால்யாத்த மாலை வெண் குடை
தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்,
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே

**பாண்டியன் நெடுஞ் செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.**

## பழமொழி நானூறு

## முன்றுறையரையனார்

"பழமொழி நானூறு" அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்ட நீதிநூலாகும். சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள பழ மொழிகள் இலக்கியம் சார்ந்தவையாகும். சங்க காலத்தினைப் பற்றி இந்நூல் அதிக தகவல்களைத் தருகின்றது. இதன் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டு எனக் கருதப்படுகின்றது.

### கல்வி

1.கேட்பாரை நாடி, கிளக்கப்படும் பொருட்கண்

வேட்கை அறிந்து, உரைப்பார், வித்தகர்;-வேட்கையால்

வண்டு வழிப்படரும் வாள் கண்ணாய்!-தோற்பன

கொண்டு புகாஅர், அவை.

2.புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்

புலம் மிக்கவர்க்கே புலனாம்;-நலம் மிக்க

பூம் புனல் ஊர!-பொது மக்கட்கு ஆகாதே;

பாம்பு அறியும் பாம்பின கால்.

3.ஈனுலகத்துஆயின், இசை பெறூஉம்; அஃது இறந்து,

ஏனுலகத்துஆயின், இனிது, அதூஉம்; தான் ஒருவன்

நாள்வாயும் நல் அறம் செய்வாற்கு இரண்டு உலகும்

வேள் வாய் கவட்டை நெறி.

**கல்லாதார்**

4.மிக்குப் பெருகி, மிகு புனல் பாய்ந்தாலும்,
உப்பு ஒழிதல் செல்லா ஒலி கடல்போல், மிக்க
இன நலம் நன்கு உடைய ஆயினும், என்றும்,
மன நல ஆகாவாம் கீழ்.

5.விழும் இழை நல்லார் வெருள் பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும்; தொழுநையுள்,
மாலையும் மாலுள் மயக்குறுத்தாள்;-அஃதால், அச்
சால்பினைச் சால்பு அறுக்குமாறு.

6.அம் கண் விசும்பின் அகல் நிலாப் பாரிக்கும்
திங்களும், தீங்குறுதல் காண்டுமால்;-பொங்கி,
அறைப் பாய் அருவி அணி மலை நாட!-
உறற்பால யார்க்கும் உறும்

**ஒழுக்கம்**

7.பரந்த திறலாரைப் பாசி மேல் இட்டு,
கரந்து மறைக்கலும் ஆமோ?-நிரந்து எழுந்த
வேயின் திரண்ட தோள், வேற்கண்ணாய்!-விண் இயங்கும்
ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல்.

8.'தமன்' என்று இரு நாழி ஈத்தவன் அல்லால்,
'நமன்' என்று, காயினும், தான் காயான், மன்னே,
'அவன்' இவன்' என்று உரைத்து எள்ளி;-மற்று யாரே,

நம நெய்யை நக்குபவர்?

9.உற்றான், உறாஅன், எனல் வேண்டா; ஒண் பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக! கற்றான்
கிழவன் உரை கேட்கும்; கேளான் எனினும்,-
இழவு அன்று, எருது உண்ட உப்பு.

**இன்னா செய்யாமை**

10.கை ஆர உண்டமையால், காய்வார் பொருட்டாக,
பொய்யாகத் தம்மைப் பொருள் அல்ல கூறுபவேல்,-
மை ஆர உண்ட கண் மாண் இழாய்!-என் பரிப,
செய்யாத எய்தாஎனின்?

11.நோவ உரைத்தாரைத் தாம் பொறுக்கலாற்றாதார்,
நாவின் ஒருவரை வைதால், வயவு உரை,-
பூவின் பொலிந்து அகன்ற கண்ணாய்!-அது அன்றோ,
தீ இல்லை ஊட்டும் திறம்?

12.வீங்கு தோள் செம்பியன் சீற்றம் விறல் விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலான், ஆங்கு
முடியும் திறத்தால் முயல்க தாம்!-கூர் அம்பு
அடி இழுப்பின், இல்லை, அரண்.

**வெகுளாமை**

13.‘கைவிட்ட ஒண் பொருள் கைவரவு இல்’ என்பார்

மெய்ப்பட்ட ஆறே உணர்ந்தாரால், மெய்யா;-
மடம் பட்ட மான் நோக்கின் மா மயில் அன்னாய்!-
கடம் பெற்றான் பெற்றான் குடம்.

14.நிரந்து வழி வந்த நீசருள் எல்லாம்
பரந்து ஒருவர் நாடுங்கால், பண்புடையார் தோன்றார்;-
மரம் பயில் சோலை மலை நாட!-என்றும்
குரங்கினுள் நன் முகத்த இல்.

15.முட்டு இன்று ஒருவர் உடைய பொழுதின்கண்,
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே;-
கட்டு அலர் தார் மார்ப!-கலி ஊழிக் காலத்து,
கெட்டார்க்கு நட்டாரோ இல்!

## இலக்கணம் – எழுத்து

**எழுத்து:**

நாம் பேசுவதை வரி வடிவில் எழுதுவது எழுத்து எனப்படும். அது முதல் எழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

**முதல் எழுத்துகள்:**

பிற எழுத்துகள் தோன்ற அடிப்படையாக உள்ள எழுத்துகள் முதல் எழுத்துகள் எனப்படும். அவ்வகையில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படும்.

**உயிர் எழுத்துகள்:**

வேற்று ஒலிகளின் துணையின்றித் தானே இயங்கும் எழுத்துகள் உயிர்எழுத்துகள்ஆகும்.நமதுஉடலில்உள்ள உயிர் தானே இயங்கி உடலையும் இயக்குவது போல் உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துகளோடு சேர்ந்து அவற்றையும் இயக்குவதால் உயிர் எழுத்துகள் எனப்படுகிறது.

**அவையாவன:**

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ - இப்பன்னிரண்டு எழுத்துகளும் உயிர் எழுத்துகள் ஆகும். இவ்வுயிர் எழுத்துகள் குறில், நெடில் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**குறில்:**

அ,இ,உ,எ,ஒ – இவை ஐந்தும் குறுகிய அளவில் ஒரு மாத்திரை அளவு உச்சரிக்கப்படுவதால் குற்றெழுத்துகள் எனப்படுகிறது..

**நெடில்:**

ஆ,ஈ,ஊ,ஏ,ஓ,ஐ,ஔ - இவை ஏழும் இரண்டு மாத்திரை அளவு நீண்டு ஒலிப்பதால் நெட்டெழுத்துகள் எனப்படுகிறது.

**மெய்யெழுத்துகள்:**

தானே தனித்து இயங்காது உயிர் எழுத்துகளின் துணையோடு இயங்கும் எழுத்துகள் மெய்யெழுத்துகள்

எனப்படும்.

**அவையாவன:**

க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் – இவை பதினெட்டும் மெய் எழுத்துகள் ஆகும்.

**மெய் எழுத்துகளின் வகைகள்:**

ஒலிக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு மெய் எழுத்துகள் மூன்று வகைப்படும்.

**அவையாவன:**

வல்லினம், மெல்லினம், இடையினம் – என மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும். மெய் எழுத்துகள் பதினெட்டும் அரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

**வல்லினம்:**

க்,ச்,ட்,த்,ப்,ற் -ஆகிய ஆறு எழுத்துகளும் வலிமையான ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன..எனவே இவ்வெழுத்துகளை வல்லினம் என்பர்.

**மெல்லினம்:**

ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் – ஆகிய ஆறு எழுத்துகளும் மென்மையான ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துகளை மெல்லினம் என்பர். இவற்றை உச்சரிக்கும் போது மூக்கின் வழியாகக் காற்று வெளிப்படுவதால் மூக்கொலிகள் என்றும் கூறுவர்.

**இடையினம்:**

ய் ,ர்,ல்,வ்,ழ்,ள் – ஆகிய ஆறு எழுத்துகளும் வன்மையாகவும் அல்லாமல் மென்மையாகவும் அல்லாமல் இடைப்பட்ட ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துகளை இடையினம் என்பர்.

**சார்பெழுத்துகள்:**

முதல் எழுத்துகளான உயிர் எழுத்துகளையும் மெய் எழுத்துகளையும் சார்ந்து பிறக்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

**வகைகள்:**

சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

அவையாவன:

1.உயிர்மெய் எழுத்து

2.ஆய்த எழுத்து

3.உயிரளபெடை

4.ஒற்றளபெடை

5.குற்றியலுகரம்

6.குற்றியலிகரம்

7.ஐகாரக் குறுக்கம்

8.ஔகாரக் குறுக்கம்

9.மகரக் குறுக்கம்

10.ஆய்தக் குறுக்கம்

**உயிர்மெய் எழுத்து:**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய் எழுத்துகள் பதினெட்டுடனும் சேர்ந்து பிறக்கும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும். அவ்வாறு சேர்ந்து உருவான உயிர்மெய் எழுத்துகள் உயிர் எழுத்துகளின் ஒலி (மாத்திரை) அளவையே பெறும்.

(எ-டு) க்+அ=க (ஒரு மாத்திரை)

க்+ஆ=கா (இரண்டு மாத்திரை)

**ஆய்தம்:**

மூன்று புள்ளிகளைக் கொண்ட ஒரு வரி வடிவம் ஆய்த எழுத்தாகும்.இதற்குத் தனிநிலை, புள்ளி எழுத்து, அடுப்பெழுத்து என்ற பெயர்களும் உண்டு. இவ்வெழுத்து எப்பொழுதும் சொல்லின் இடையிலேயே வரும்.

(எ-டு) அஃது, எஃகு.

**அளபெடை:**

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள் சில நேரங்களில் தமக்குரிய மாத்திரை அளவில் இருந்து நீண்டு ஒலிக்கும்.அவ்வாறு ஒலிப்பதற்கு அளபெடை என்று பெயர்.

**வகைகள்:**

உயிரளபெடை,ஒற்றளபெடை என அளபெடை இருவகைப்படும்.

**உயிரளபெடை:**

1.செய்யுளிசை அளபெடை

2.இன்னிசை அளபெடை

3.சொல்லிசை அளபெடை

என உயிரளபெடை மூவகைப்படும்.

**செய்யுளிசை அளபெடை:**

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் நெட்டெழுத்துகள், தமக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து நீண்டு ஒலிக்கும். நெட்டெழுத்துகள்

அளபெடுத்து வருவதைக் குறிக்க அதன் குறில் நெட்டெழுத்தை அடுத்து எழுதப்படும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

(எ-டு) ஆஅதும் என்னுமவர்

தெய்வம் தொழாஅள்

நல்ல படாஅ

**இன்னிசை அளபெடை:**

செய்யுளில் ஓசை குறையாத போதும்,இனிய ஓசையைத் தரும் பொருட்டு ஒரு குறில் நெடிலாக அளபெடுத்து வருவது இன்னிசை அளபெடை எனப்படும்.

(எ-டு) கெடுப்பதூஉம்

துன்புறூஉம்

**சொல்லிசை அளபெடை:**

செய்யுளில் வரும் ஒரு சொல்லின் பொருளை மாற்ற நெட்டெழுத்து அளபெடுத்து வருவது சொல்லிசை அளபெடை எனப்படும்.

(எ-டு)உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்.

இக் குறளில் வரும் நசை என்ற சொல் விருப்பம் என்ற பெயர்ச் சொல்லைக் குறிக்கிறது. ஆனால் நசைஇ என்று அளபெடுத்து வரும் போது விரும்பி என்று வினைச்சொல்லாக மாறுகிறது. இவ்வாறு ஒரு சொல்லின் பொருளை மாற்ற அளபெடுத்து வருவது சொல்லிசை அளபெடை எனப்படும்.

**ஒற்றளபெடை:**

செய்யுளில் ஓசை குறையும் போது சொல்லின் இடையிலும இறுதியிலும் வரும் ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்,வ்,ய்,ல்,ள் பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்த எழுத்தும் அவ்வோசையை நிறைக்க அளபெடுத்து வரும். அவை அளபெடுத்து வருவதைக் குறிக்க அவ்வொற்றெழுத்துகளே மீண்டும் எழுதப்படும்.இவ்வாறு ஒற்றெழுத்துகள் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை எனப்படும்.

எ-டு: இலங்ங்கு வெண்பிறை – இடையில்

மடங்ங் கலந்த - இறுதியில்

எஃஃகிலங்கிய - இடையில்

**குற்றியலுகரம்:**

க்,ச்,ட்,த்,ப்,ற் – எனும் ஆறு வல்லின மெய்களுடனும் சேர்ந்து வரும் ' உ' கரம் அதாவது கு,சு,டு,து,பு,று – சொல்லின் இறுதியில் வரும் போது தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ' உ'கரம் குற்றியலுகரம் எனப்படுகிறது.

குற்றியலுகரச் சொல்லின் இறுதி எழுத்தின் அடுத்த எழுத்தை நோக்க இக்குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

**அவையாவன:**

1.வன்தொடர்க் குற்றியலுகரம் – பாக்கு, பட்டு

2.மென்தொடர்க் குற்றியலுகரம் – சங்கு , ஆண்டு

3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் – மார்பு , சால்பு

4.உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – வரகு, படகு

5.நெடில்தொடர்க் குற்றியலுகரம் – நாடு, காசு

6.ஆய்தத்தொடர் குற்றியலுகரம் – அஃது, எஃகு

**குற்றியலிகரம்:**

நிலைமொழியின் இறுதியில் குற்றியலுகரம் அதாவது கு,சு,டு,து,பு,று - வந்து வருமொழியின் முதலில் ' ய' வந்தால், நிலைமொழியும் வருமொழியும் இணையும் போது 'உ' என்ற எழுத்து 'இ' என்ற எழுத்தாக மாறும். இவ்வாறு திரிந்த 'இ' தனக்குரிய மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒலிப்பதே குற்றியலிகரம் எனப்படுகிறது.

(எ-டு) நாடு+யாது = நாடியாது

சால்பு+ யாது=சால்பியாது

**ஐகாரக் குறுக்கம்:**

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் அமைந்த 'ஐ' என்ற எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒரு மாத்திரையாக உச்சரிக்கப்படும்.இவ்வாறு 'ஐ' குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ-டு) ஐவர் ,கலைஞர் , குவளை

**ஔகாரக் குறுக்கம்:**

சொல்லின் முதலில் வரும் 'ஔ' என்ற எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒரு மாத்திரையாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் 'ஔ', ஔகாரக் குறுக்கம் எனப்படுகின்றது.

(எ-டு) ஔவை, கௌதாரி

**மகரக் குறுக்கம்:**

ஒரு சொல்லில் 'ண்', அல்லது'ன்'- என்ற மெய் எழுத்து வந்து அதனை அடுத்து 'ம்' வந்தால் அது தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ-டு) மருண்ம் (மருளும்)

போன்ம் (போலும்)

மேலும் நிலைமொழியின் இறுதியில் 'ம்' அமைந்து வருமொழியின் முதலில் 'வ ' இருந்தாலும் 'ம்' தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் 'ம்' மகரக் குறுக்கம் எனப்படுகிறது.

(எ-டு) வரும் வளவன்

தரும் வடிவேல்

**ஆய்தக் குறுக்கம்:**

தனிக்குறிலை அடுத்து ல்,ள் ஆகிய மெய்யெழுத்துகள் அமைந்து வருமொழியின் முதலில்'த' வந்தால் அச் சொற்கள் இணையும் போது ஆய்தம் பிறக்கும்.இவ்வாய்தம் தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக் குறுக்கம் எனப்படுகிறது.

(எ-டு) கல் + தீது = கஃறீது

பல் + துளி = பஃறுளி

முள் + தீது = முஃடீது

**மொழி முதல் எழுத்துகள்:**

சொற்களின் முதலில் வரும் எழுத்துகள் மொழி முதல் எழுத்துகள் எனப்படும். அவை பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் க,ச,த,ந,ப,ம,வ,ய,ஞ,ங என்னும் பத்து உயிர்மெய் எழுத்துகளும் ஆகும்.

(எ-டு) **அ**டை, **ஆ**டை, **இ**டை, **ஈ**ட்டி, **உ**டை, **ஊ**டகம்,

**எ**டை,**ஏ**டு, **ஐ**யம்,**ஒ**ற்றுமை, **ஓ**டம்,**ஔ**வை.

**க**னி, **ச**க்தி, **த**ண்ணீர், **ந**ட்பு, **ப**டை, **ம**க்கள்,

**வ**ளம், **ய**வனர், **ஞா**லம், (அங்)**ங**னம் .

**மொழி இறுதி எழுத்துகள்:**

சொற்களின் இறுதியில் வரும் எழுத்துகள் மொழி இறுதி எழுத்துகள் எனப்படும்.அவை தனித்தும் மெய்யுடன் கூடியும் வரும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் - என்னும் பதினொரு மெய் எழுத்துகளும் , குற்றியலுகரமும் ஆகும்.

( எ-டு பல – அ

நிலா – ஆ

நன்றி -இ

தீ - ஈ

மருந்து - உ

பூ -ஊ

சேஎ (உயர்வு) - எ

எங்கே - ஏ

வெறுங்கை – ஐ

நொ (நோய்) – ஒ

கோ - ஓ

கௌ (பற்றுதல்) – ஔ

உரிஞ் (உரிஞ்சு) - ஞ்

மண் - ண்

வெரிந்(முதுகு) - ந்

மரம் - ம்

பொன் - ன்

பாய் - ய்

வேர் - ர்

வேல் - ல்

தெவ் (பகை) - வ்

யாழ் - ழ்

தேள் - ள்

அஃது - து (உ)

**போலி:**

ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் கடையிலும் அமைந்த ஒரு எழுத்திற்குப் பதிலாக வேறொரு எழுத்து வந்து பொருள் மாறாமல் இருந்தால் அதைப் போலி என்பர். அது முதற்போலி,இடைப்போலி, கடைப் போலி என மூவகைப்படும்.

(எ-டு) **முதற் போலி:**

மஞ்சு – மைஞ்சு

மயன் – மையன்

**இடைப் போலி:**

அமச்சு – அமைச்சு

அரசு - அரைசு

**கடைப் போலி:**

பந்தல் – பந்தர்

அறம் – அறன்

**சுட்டெழுத்துகள்:**

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்திற்குச்

சுட்டெழுத்து என்று பெயர். அ,இ,உ – என்ற எழுத்துகள் சொல்லின் முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்.

இது அகச்சுட்டு, புறச் சுட்டு என  இருவகைப்படும்.

(எ-டு) **அகச்சுட்டு**:

அது , இது , உது

அவன், இவன், உவன்

**புறச் சுட்டு:**

அப்பக்கம்

இப்பக்கம்

உப்பக்கம்

**வினா எழுத்துகள்:**

வினாப் பொருளைச் சுட்ட வரும் எழுத்துகள் வினா எழுத்துகள் எனப்படும். இவை சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.

**சொல்லின் முதலில் வருவன:**

எ,யா – எது?, யார்?

**சொல்லின் இறுதியில் வருவன:**

ஆ, ஓ – வந்தானா? , வந்தானோ?

**சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருவன:**

ஏ – ஏன்? , எங்கே?

**வினா எழுத்துகளின் வகைகள்:**

அகவினா ,புறவினா என இருவகைப்படும்.

**அகவினா:**

ஏன் , எங்கு , எப்படி

**புறவினா:**

எப்போது? ,வந்தானா? , அவனா? , எவ்வூர்?.

# இரண்டாம் பருவம்

## சிலப்பதிகாரம்

ஐம்பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம் , மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி ஆகியவற்றுள் முதன்மைக் காப்பியமாகவும் முதல்காப்பியமாகவும் விளங்குவது சிலப்பதிகாரமே ஆகும். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் ஆகியுள்ளது இக்காப்பியம் . இந்நூலில் மூன்று காண்டங்கள் உள்ளன. அவை தமிழகத்தை ஆண்ட முப்பெரு வேந்தர்களின் தலைநகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி ஆகியவற்றின் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளமை மிகவும் சிறப்புக்குரியதாகும்.

‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் '
'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்', என்ற முப்பெரும் உண்மைகளை உணர்த்தி மிகச் சிறப்புடன் சிலப்பதிகாரம் விளங்குகிறது.இந்நூல் எழுந்த காலம் கி.பி.2-ஆம் நூற்றாண்டு ஆகும்.

## கனாத்திறம் உரைத்த கதை

கண்ணகி, தேவந்தியிடம் "யான், இனி என் கணவனுடன் கூடுதலைப் பெறவே மாட்டேன். என் நெஞ்சம் ஏனோ வருந்துகின்றது! கனவிலே நேற்றிரவு கோவலன் வந்தான். என் கைப்பற்றி'வருக! என அழைத்தான். இருவரும் வீட்டைவிட்டுப் போய், ஒரு பெரிய நகரினுள் சென்றோம். சேர்ந்த நகரிலே என் மீது தேளினைப் பிடித்து இட்டவரைப்போலக், 'கோவலனுக்கு ஒரு தீங்கு விளைந்தது' என்று எங்கட்கு ஏலாத்தோர் வார்த்தையினைச் சொல்லினர். அது கேட்டுக் காவலன் முன்னர்ச் சென்று யானும் உண்மையைக் கூறி வழக்கு உரைத்தேன். காவலனோடு, அவ்வூருக்கும் நேரிட்ட தீங்கு ஒன்றும் உண்டாயிற்று. அந்நிலையே யான் பேச்சற்றேன்" என்று தான் கண்ட கனவை எடுத்துரைத்தாள். கோவலன் கண்ணகியிடம் மீண்டும் வந்தான். தன் மனைவியின் வாடிய மேனியும் வருத்தமும் கண்டான். தம் குலத்தவர் தந்த மலைபோலும் பெரிய பொருட்குவைகள் எல்லாமே தொலைந்து போயின; அதனால் வந்த இல்லாமை நிலை தனக்கு வெட்கத்தைத் தருவதாகவும் கூறினான். கண்ணகியோ தன் திருமுகத்திலே முறுவலினைக் காட்டி "சிலம்புகள் உள்ளன; எடுத்துக் கொள்ளும்" என்றாள். காதலியான கண்ணகியானவள் கண்ட தீய கனவு, கரிய நெடுங் கண்களையுடைய மாதவியின் பேச்சினையும் பயனற்றுப் போகச் செய்தது. பழவினை வந்து கோவலனின் நெஞ்சினைத் தன் போக்கிலே ஒருப்படுத்தப், பொழுது விடியுமுன் இருவரும் தம் வீட்டைவிட்டும், புகாரை விட்டும் வெளியேறி, மதுரை நோக்கிப் பயணமாயினர். இப்பகுதியில் கண்ணகியின் கனவு விளக்கப்பட்டுள்ளது.

## புகார்க் காண்டம்

## கனாத்திறம் உரைத்த காதை

**மகளிர் இரவிற்கு ஏற்ற கோலம் கொண்டு இல் உறை தெய்வத்தை வழிபடுதல:**

அகல் நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை

நிகர் மலர் நெல்லொடு தூஉய், பகல் மாய்ந்த

மாலை மணி விளக்கம் காட்டி, இரவிற்கு ஓர்

கோலம் கொடி-இடையார்-தாம் கொள்ள-

**மாலதியின் வரலாறு:**

**(மாலதி இறந்த மகவைக் கொண்டு தெய்வக் கோட்டங்களுக்குச் சென்று,வரம் வேண்டுதல்)**

மேல் ஓர் நாள் மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்க,

பால் விக்கி, பாலகன்-தான் சோர, மாலதியும்,

'பார்ப்பானொடு மனையாள் என்மேல் படாதன விட்டு

ஏற்பன கூறார்' என்று ஏங்கி, மகக் கொண்டு,

அமரர் தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம்,

புகர் வெள்ளைநாகர்-தம் கோட்டம், பகல் வாயில்

உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேல்கோட்டம்,

வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம்,

நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம், புக்கு எங்கும்

'தேவிர்காள்! எம் உறு நோய் தீர்ம்' என்று மேவி-

**மாலதி கையிலிருந்த பிணத்தை இடாகினிப்பேய் பிடுங்கித் தின்னுதல்:**

ஓர் பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு,

ஏசும் படி ஓர் இளங்கொடி ஆய், 'ஆசு இலாய்!

செய் தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;

பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையில்

படு பிணம் தா' என்று, பறித்து, அவள் கைக் கொண்டு,

சுடுகாட்டுக் கோட்டத்து, தூங்கு இருளில் சென்று, ஆங்கு

இடு பிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,

மடிஅகத்து இட்டாள், மகவை-

**சாத்தன் மகவாய் வருதல்:**

இடியுண்ட மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச் சாத்தன்

'அஞ்ஞை! நீ ஏங்கி அழல்' என்று, 'முன்னை

உயிர்க் குழவி காணாய்' என்று, அக் குழவி ஆய், ஓர்

குயில்-பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,

மாயக் குழவி எடுத்து, மடித் திரைத்து,

தாய் கைக் கொடுத்தாள், அத் தையலாள்.

தூய

**தேவந்தியின் வரலாறு:**

மறையோன் பின் மாணி ஆய், வான் பொருள் கேள்வித்

துறைபோய், அவர் முடிந்தபின்னர், இறையோனும்

தாயத்தாரோடும் வழக்கு உரைத்து, தந்தைக்கும்

தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேய நாள்,

தேவந்தி என்பாள் மனைவி, அவளுக்கு,

'பூ வந்த உண் கண் பொறுக்க' என்று மேவி, தன்

மூவா இள நலம் காட்டி, 'எம் கோட்டத்து

நீ வா' என உரைத்து, நீங்குதலும்-

**தேவந்தி சாத்தன் கோட்டத்தை வழிபட்டிருத்தல்:**

தூ-மொழி, ஆர்த்த கணவன் அகன்றனன், "போய் எங்கும்

தீர்த்தத் துறை படிவேன்" என்று; அவனைப் போர்த்து இங்ஙன்

மீட்டுத் தருவாய்' என ஒன்றன்மேல் இட்டு,

கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்,

**தேவந்தி கண்ணகியிடம் சென்று ஆசி கூறுதல்:**

வாட்டு-அரும் சீர்க்

கண்ணகி-நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று

எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி;

அறுகு, சிறு பூளை, நெல்லொடு தூஉய்ச் சென்று;

'பெறுக, கணவனோடு!' என்றாள்-

**கண்ணகி தான் கண்ட கனாவினைத் தேவந்திக்கு உரைத்தல்:**

'பெறுகேன்; கடுக்கும் என் நெஞ்சம்; கனாவினால், என் கை

பிடித்தனன் போய் ஓர் பெரும் பதியுள் பட்டேம்;

பட்ட பதியில், படாதது ஒரு வார்த்தை

இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என்-தன்மேல்;

"கோவலற்கு உற்றது ஓர் தீங்கு" என்று அது கேட்டு,

காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனொடு

ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;

தீக் குற்றம் போலும், செறி-தொடீஇ! தீக் குற்றம்

உற்றேனொடு உற்ற உறுவனோடு யான் உற்ற

நல் திறம் கேட்கின் நகை ஆகும்’-

**தேவந்தி கூறிய தேறுதல் உரை:**

பொன்-தொடீஇ! கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில்; போய்க் கெடுக! உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடல் அவிழ் நெய்தல் அம் கானல், தடம் உள,
சோம குண்டம், சூரிய குண்டம், துறை மூழ்கி,
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்து, தையலார்;
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒரு நாள்
ஆடுதும்’ என்ற அணி-இழைக்கு-அவ் ஆய்-இழையாள்,

**கண்ணகியின் மறுமொழி:**

‘பீடு அன்று’ என இருந்தபின்னரே-

**கோவலன் வருகை:**

‘நீடிய காவலன் போலும், கடைத்தலையான் வந்து-நம்
கோவலன்!’ என்றாள் ஓர் குற்றிளையாள். கோவலனும்
பாடு அமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தம் கண்டு, ‘யாவும்
சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலம் தரு வான் பொருள்-குன்றம் தொலைந்த;
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு’ என்ன-

**கண்ணகியின் விடை:**

நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டி,

'சிலம்பு உள; கொண்ம்' என-

**கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லுதல்:**

'சேயிழை! கேள்; இச் சிலம்பு முதல் ஆக, சென்ற கலனோடு

உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்த சீர்

மாட மதுரை அகத்துச் சென்று; என்னோடு இங்கு,

ஏடு அலர் கோதாய்! எழுக' என்று, நீடி

வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்

கனை சுடர் கால் சீயாமுன்.

**வெண்பா;**

காதலி கண்ட கனவு கரு நெடுங் கண்

மாதவி-தன் சொல்லை வறிதாக்க, மூதை-

வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்

கனை சுடர் கால் சீயாமுன்.

## பெருங்கதை

## கொங்குவேளிர்

பெருங்கதை என்ற காப்பியம் குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் எழுதிய 'பிருகத்கதா' என்ற நூலைத் தழுவி நிர்வாண தத்தனின் வரலாற்றை மட்டும் கூறும் நூல் ஆகும். சமண மதக் கோட்பாடுகள் அமைந்துள்ள இந்நூலை இயற்றியவர் வேளாண் மரபில் வந்த சிற்றரசராகிய கொங்குவேள் என்பவராவார் .எனவே இந்நூலுக்கு '**கொங்குவேள் மாக்கதை**' என்ற பெயரும் உண்டு.

## பந்தடி கண்டது

இதன்கண் : வாசவதத்தையும் பதுமாபதியும் பந்தடி காணுதலும், வயந்தகன் உதயணனுக்குக் கூறுதலும், உதயணன் மறைந்து சென்று பந்தடி காணுதலும், இராசனை இயல்பும், பந்து வண்ணனையும், இராசனை பந்தடித்தலும், காஞ்சனமாலை பந்தடித்தலும், அயிராபதி பந்தடித்தலும், விச்சுவலேகை பந்தடித்தலும், ஆரியை பந்தடித்தலும், வாசவதத்தை தன் தோழியரை நோக்கலும், கோசல நாட்டின் பெருமையும், கோசலத்தரசன் மகள் வண்ணனையும், கோசலத்தரசன் மகள் பந்தடித்தலும், வாசவதத்தை தன்னுள் நினைதலும் உதயணன் கோசலத்தரசன் மகளை விரும்பலும் கூறப்படும்.

அன்புமிகச் சிறந்தாண்டு அமருங் காலை
மன்பெருஞ் சிறப்பின் மறப்போர் உதயணன்
அருமை சான்ற ஆருணி அரசன்
உரிமைப் பள்ளியுள் தெரிவனன் கொண்ட
ஆயிரத்து எண்மர் அரங்கியன் மகளிர்
மாசில் தாமரை மலர்மகள் அனையோர்
ஆடலும் பாடலும் நாடொறும் நவின்ற
நன்நுதல் மகளிரை மின்நேர் நுண்இடை
வாசவ தத்தைக்கும் பதுமா பதிக்கும்
கூறுநனி செய்து வீறுயர் நெடுந்தகை
கொடுத்த காலை அடுத்த அன்போடு
அரசன் உலாவெழும் அற்றம் நோக்கித்
தேவியர் இருவரும் ஓவியச் செய்கையின்
நிலாவரி முற்றத்துக் குலாவொடு ஏறிப்
பந்தடி காணிய நிற்ப இப்பால்

வெங்கோல் அகற்றிய வென்றித் தானைச்

செங்கோன் சேதிபன் செவிமுதல் சென்று
வயந்தகன் உரைக்கும் நயந்தனை அருளின்
மற்றுநின் தோழியர் பொன்தொடிப் பணைத்தோள்
தோழியர் தம்மோடு ஊழூழ் இகலிப்
பந்துவிளை யாட்டுப் பரிந்தனர் அதனால்
சிறப்பின்று உலாப்போக்கு அறத்தகை அண்ணல்நின்
மாண்குழைத் தேவியர் இருவரும் இகறலின்
காண்தகை உடைத்தது கரந்தனை ஆகி
வடிவேல் தடக்கை வத்தவர் இறைவ
பிடிமிசை வந்து பிணாஉரு வாகிச்
சென்றனை காண்கென நன்றென விரும்பிப
படைஉலாப் போக்கி இடைதெரிந்து இருந்தாங்கு
யாவரும் அறியா வியல்பில் கரந்து
காவலன் பிடிமிசைக் காண்டக ஏறிப்
பல்வகை மகளிரொடு பைஎனச் சென்றுதன்
இல்லணி மகளிரொடு இயைந்தனன் இருப்ப

இகலும் பந்தின் இருவரும் விகற்பித்து
அடிநனி காண்புழி அணங்கேர் சாயல்
கொடிபுரை நுண்இடைக் கொவ்வைச் செவ்வாய்
மதுநூறு தெரியல் மகதவன் தங்கை
பதுமா பதிதன் பணிஎதிர் விரும்பி
விராய்மலர்க் கோதை இராசனை யென்போள்
கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து

மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருத்தி
அணங்கெனக் குலாஅய் அறிவோர் புனைந்த
கிடையும் பூளையும் இடைவரி உலண்டும்
அடையப் பிடித்தவை அமைதியில் திரட்டிப்
பீலியும் மயிரும் வாலிதின் வலந்து
நூலினுங் கயிற்றினும் நுண்ணிதில் சுற்றிக்
கோல மாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் தோலும் பீலிக் கண்ணும்
பூம்புனல் நுரையும் புரையக் குத்திப்
பற்றிய நொய்ம்மையில் பல்வினைப் பந்துகள்
வேறுவேறு இயற்கைய கூறுகூறு அமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையும் உடையன
தண்வளி எறியினுந் தாம்எழுந்து ஆடுவ
கண்கவர் அழகொடு நெஞ்சுஅக லாதன
ஒண்பந்து ஓர்ஏழ் கொண்டனள் ஆகி
ஒன்றொன்று ஒற்றி உயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்
கண்ணிமை யாமல் எண்ணுமின் என்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கால்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையில் சுழன்றுமாறு அடித்தும்
அடித்த பந்துகள் அங்கையின் அடக்கியும்
மறித்துத் தட்டியும் தனித்தனி போக்கியும்
பாயிரம் இன்றிப் பல்கலன் ஒலிப்ப

ஆயிரம் கைநனி அடித்தவள் அகல

அன்ன மென்நடை அவந்திகை யுவந்தவள்
கண்மணி அனைய ஒண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூம்பந்து அடித்துவிசும்பு ஏற்றியும்
அடித்த பந்தால் விடுத்தவை ஓட்டியும்
குழல்மேல் வந்தவை குவிவிரல் கொளுத்தியும்
நிழல்மணி மேகலை நேர்முகத்து அடித்தும்
கண்ணியில் சார்த்தியும் கைக்குள் போக்கியும்
உள்நின்று திருத்தியும் விண்உறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை ஆர்ப்ப
ஆயிரத்து ஐந்நூறு அடித்தனள் அகலச்

செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதிஎனு அம்பணைத் தோளி
மான்நேர் நோக்கின் கூனி மற்றவள்
தானேர் வாங்கித் தனித்தனி போக்கி
நாற்றிசைப் பக்கமும் நான்கு கோணமும்
காற்றினும் கடிதாக் கலந்தனள் ஆகி
அடித்தகைத் தட்டியுங் குதித்தும்முன் புரியா
அகங்கை யொட்டியும் புறங்கையில் புகுத்தியும்
தோள்மேல் பாய்ச்சியும் மேன்மேல் சுழன்றும்
கூன்மேல் புரட்டியும் குயநடு வொட்டியும்
வாக்குறப் பாடியும் மேற்படக் கிடத்தியும்

நோக்குநர் மகிழப் பூக்குழல் முடித்தும்
பட்ட நெற்றியில் பொட்டிடை ஏற்றும்
மற்றது புறங்கையில் தட்டினர் எற்றியும்
முன்னிய வகையான் முன்ஈ ராயிரங்
கைந்நனி அடித்துக் கையவள் விடலும்

பேசிய முறைமையின் ஏசா நல்எழில்
வாசவ தத்தைக்கு வலத்தோள் அனைய
அச்சமில் காரிகை விச்சுவ லேகைஎன்று
உற்ற நாமப் பொற்றொடிக் குறளி
யானிவண் நிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலாது என்றவள் சேலந் திருத்திக்
கருவிக் கோல்நனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதில்
தட்டினள் ஒன்றொன்று உற்றனள் எழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பனள் ஆகியும்
வாங்குபு கொண்டு வானவில் போல
நீங்கிப் புருவ நெரிவுடன் எற்றியும்
முடக்குவிரல் எற்றியும் பரப்புவிரல் பாய்ச்சியும்
தனித்துவிரல் தரித்து மறித்தெதிர் அடித்தும்
குருவிக் கவர்ச்சியின் அதிரப் போக்கியும்
அருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியும்
ஒருபால் பந்தின் ஒருபால் பந்துற
இருபால் திசையும் இயைவன ளாகிப்

பாம்புஒமுக் காக ஓங்கின ஓட்டியும்
காம்பிலை வீழ்ச்சியின் ஆங்கிழித் திட்டும்
முன்னிய வகையான் முன்ஈ ராயிரத்து
ஐந்நூ றடித்துப் பின்னவள் விடலும்

சீரியல் பதுமைதன் சிந்தைக்கு ஒப்பெனும்
காரிகை மயிலன வாரியை புகுதா
நுணங்குகொடி மருங்கு நோவ அசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும்
சூடகம் ஏற்றியும் பாடகம் திருத்தியும்
நாடக மகளிரின் நன்கனம் உலாவியும்
இருகையு மடிப்ப விசும்பொடு நிலத்திடை

திரிபுவீழ் புள்போல் ஒருவயி னில்லாது
எழுந்துவீழ் பந்தோடு எழுந்துசெல் வனள்போல
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்
வரிவளைக் கையும் மனமும் ஓட
அரியார் மேகலை ஆர்ப்பொடு துளங்கவும்
அரிமலர்க் கோதையொடு அணிகலம் சிதறவும்
இருந்தனள் நின்றனள் என்பதை அறியார்
பரந்த பல்தோள் வடிவினள் ஆகித்
திரிந்தனள் அடித்துத் திறத்துளி மறித்தும்
முரியுந் தொழிலொடு மூவாயி ரங்கை
முறையின் ஏற்றிப் பந்துநிலத்து இடலும்

வரிநெடும் பந்து வந்தெதிர் கொள்ளுநர்
ஒருவரும் இன்றி நின்றுழிப் பொருவரும்
வாளேர் தடங்கண் வாசவ தத்தை
கோளேர் மதிமுகம் கோட்டி நோக்கக்
கிடையோர் போலக் காமத்தில் கழுமாது
இடையோர் இயல்பின தாகி இல்லது
உடையோர்க் குரிய உதவி நாடி
ஆனாச் சிறப்பின் யாவர்க் காயினும்

தானப் பெரும்பயந் தப்புத லின்றி
ஓசை யோடிய உலவாச் செல்வத்துக்
கோசல வளநாட்டுக் கோமான் பிழையாத்
தேவியர்க் கெல்லாந் தேவி யாகிய
திருத்தகு கற்பின் தீங்குயிற் கிளவி
வரிக்குழல் கூந்தல் வசுந்தரி தன்மகள்
மற்றவை தொலையச் செற்றொளி திகழத்
தனக்கமை எய்திய தவளையங் கிண்கிணி
வனப்பெடுத் துரைஇ வையகம் புகழினும்
புகழ்ச்சி முற்றாப் பொருவரு வனப்பில்
திருக்கண் டன்ன வுருக்கிளர் கண்ணி
கோசலத் தரசன் கோமகள் பூவணி
வாசச் சுரிகுழல் மாணிழை ஒருத்தியென்று
ஆங்கொரு காரணத்து அவள்வயின் இருந்தோள்
பூங்குழை தோற்றது பொறாஅ நிலைமையள்

எழுந்தனள் தேவியைப் பணிந்தனள் புகுந்து
மடந்தையர் ஆடலை இகழ்ந்தனள் நகையா
வந்தரி வையரெதிர் வரசதி வகையால்
பந்தாடு இலக்கணம் நின்றுபல பேசி
இளம்பிறைக் கோடெனக் குறங்கிரு பக்கமும்
விளங்கியேர் பிறழ வேற்கணி யிருந்து
முரண்டெழு வனப்பின் மூவேழ் ஆகிய
திரண்டவொண் பந்து தெரிவனள் ஆகி
ஓங்கிய ஆடலின் ஒன்றிது ஆகலின்
தான்சம நின்று பாங்குறப் பகுந்து
மண்டலம் மாக்கி வட்டணை முகத்தே
கொண்டனள் போக்கிக் குறிவயிற் பெயர்த்துப்ப்
பூவீழ்த் தெழுப்பிப் புறங்கையின் மற்றவை
தான்மறித் தடித்துத் தகுதியின் எழஎழக்
காம தேவியர் காண்பனர் உவப்பப்
பூமி தேவியிற் புறம்போ வனள்போல்
பைய எழுவோள் செய்தொழிற்கு ஈடாக்
கையுங் காலும் மெய்யும் இயையக்
கூடுமதி முகத்திடைப் புருவமுங் கண்ணும்
ஆடன் மகளி ரவிநயம் வியப்பவும்
பேசிய விலயம் பிழையா மரபிற்
பாடன் மகளிர் பாணி யளப்பவும்
மருவிய கதியிற் கருவிக் கூற்றோர்
இருபதம் பெயர்க்கு மியல்கொண் டாடவும்

சிந்தை பெயராத் திறத்திற மவையவை
பந்தாட் டியலோர் தந்தமி லுவப்பவும்
ஓதிய முறைமையின் யாதுங் காணார்
தேவிய ரிருவருந் திகைத்தன ரிருப்பவும்
காந்தண் முகிழ்நனி கவற்றுமெல் விரலின்
ஏந்தின ளெடுத்திட் டெறிவுழி முன்கையிற்
பாய்ந்தவை நிலத்தினும் விசும்பினு மோங்கிச்
சூறை வளியிடைச் சுழலிலை போல
மாறுமா றெழுந்து மறிய மறுகி
ஏறுப விழிபவா காய நிற்பன
வேறுபடு வனப்பின் மும்மைய வானவை
ஏர்ப்பொலி வளைக்கை யிரண்டே யாயினும்
தேர்க்கா லாழியிற் சுழன்றவை தொழில்கொள

ஓடா நடவா வொசியா வொல்காப்
பாடாப் பாணியி னீடுயிர்ப் பினளாய்க்
கண்ணின் செயலினுங் கையின் றொழிலினும்
விண்ணவர் காணினும் வீழ்வர்கொல் வியந்தெனப்
பாடகத் தரவமுஞ் சூடகத் தோசையும்
ஆடுபந் தொலியுங் கேட்பி னல்லதை
ஐயபந் தெழவெழ வதனுட னெழுதலிற்
கையுங் காலு மெய்யுங் காணார்
மண்ணினள் விண்ணின ளென்றறி யாமை
ஒண்ணுதன் மாதரை யுள்ளூழி யுணரும்

தன்மையு மரிதெனத் தனித்தனி மயங்கி
மாயங் கொல்லிது மற்றொன் றில்லென
ஆய நவின்றமை யறிந்தன ளாகிச்
சொல்லிய மகளி ரெல்லாங் காணச்
சுழன்றன தாமம் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி அவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவியர் இழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்
அங்கையின் ஏற்றும் புறங்கையிடன் ஓட்டியும்
அடிமுதன் முடிவரை இழைபல திருத்தியும்
படிந்தவண்டு எழுப்பியுங் கிடந்தபந்து எண்ணியும்
தேமலர்த் தொடையல் திறத்திறம் பிணைத்தும்
பந்துவரல் நோக்கியும் பாணிவர நொடித்தும்
சிம்புளித் தடித்துங் கம்பிதம் பாடியும்
ஆழியென உருட்டியும் தோழியொடு பேசியும்
சாரிபல வோட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி அவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணா யிரங்கை ஏற்றினள் ஏற்றலும்

கண்ணார் மாதர் மதிமுகங் காணில்
காவல் மன்னன் கலங்கலும் உண்டெனத்
தேவியும் உணர்வாள் தீதென நினைஇ
வெள்ளத் தானை வேந்தன் பெயர்ந்து

பிடிமிசைத் தோன்றலும் பேதையர் தத்தம்

இடவயின் பெயர்ந்தனர் எழுந்தனர் விரைந்துஎன்

## திருவாசகம்

சைவ சமயத்தில் தோன்றிய நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட நூலே திருவாசகம் ஆகும். திருவாசகம் என்ற சொல்லுக்கு மேன்மையான வாசகம் என்ற பொருளுண்டு.' திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதும் 'திருவாசகம் என்னும் தேன்' என்பதும் இந்நூலின் பெருமையை உணர்த்தும் தொடர்கள் ஆகும். இதனை இயற்றிய மாணிக்கவாசகர் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் திருவாதவூரில் பிறந்தார். ஆரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்த போது 'தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டம் பெற்றார். இவர் சிவபெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டவர். எனவே இவருக்காக இறைவனே காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி (குதிரைகளாக்கி) ஓட்டி வந்தார் என்பர். இவர் இயற்றிய மற்றொரு நூல் திருக்கோவையார் ஆகும்.

### திருஎம்பாவை

`ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்

சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள் தடம் கண்

மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவி தான்?

மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்

வீதிவாய்க் கேட்டலுமே, விம்மி விம்மி, மெய்ம்மறந்து,

போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்

ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே! என்னே!

ஈதே எம் தோழி பரிசு?' ஏல் ஓர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப் பகல் நாம்

பேசும்போது; எப்போது இப் போது ஆர் அமளிக்கே

நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்!' `நேரிழையீர்!

சீ! சீ! இவையும் சிலவோ? விளையாடி

ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்

கூசும் மலர்ப் பாதம் தந்தருள வந்தருளும்

தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்

ஈசனார்க்கு அன்பு ஆர்? யாம் ஆர்?' ஏல் ஓர் எம்பாவாய்! 2

`முத்து அன்ன வெள் நகையாய்! முன் வந்து, எதிர் எழுந்து, "என்

அத்தன், ஆனந்தன், அமுதன்" என்று அள்ளூறித்

தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்'.

`பத்து உடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்கு உடையீர்!

புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால், பொல்லாதோ?'

`எத்தோ நின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?'

`சித்தம் அழகியார் பாடாரோ, நம் சிவனை?'

`இத்தனையும் வேண்டும் எமக்கு' ஏல் ஓர் எம்பாவாய்! 3

`ஒள் நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?'

`வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?'

`எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம்: அவ்வளவும்

கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே'

`விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப் பொருளை,

கண்ணுக்கு இனியானை, பாடிக் கசிந்து, உள்ளம்

உள் நெக்கு, நின்று உருக, யாம் மாட்டோம்; நீயே வந்து

எண்ணி, குறையில், துயில்' ஏல் ஓர் எம்பாவாய்! 4

## திருக்கோத்தும்பி

பூ ஏறு கோனும், புரந்தரனும், பொற்பு அமைந்த
நா ஏறு செல்வியும், நாரணனும், நான்மறையும்,
மா ஏறு சோதியும், வானவரும், தாம் அறியாச்
சே ஏறு சேவடிக்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ! 1

நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்? மதி மயங்கி
ஊன் ஆர் உடை தலையில் உண் பலி தேர் அம்பலவன்
தேன் ஆர் கமலமே சென்று ஊதாய்; கோத்தும்பீ! 2

தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே,
நினைத்தொறும், காண்தொறும், பேசும்தொறும், எப்போதும்,
அனைத்து எலும்பு உள் நெக, ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ! 3

கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்,
என் அப்பன், என் ஒப்பு இல் என்னையும் ஆட்கொண்டருளி,
வண்ணப் பணித்து, என்னை `வா' என்ற வான் கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ! 4

## குயில் பத்து

கீதம் இனிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின், பாதாளம் ஏழினுக்கு அப்பால்;
சோதி மணி முடி சொல்லின், சொல் இறந்து நின்ற தொன்மை

ஆதி குணம் ஒன்றும் இல்லான்; அந்தம் இலான்; வரக் கூவாய்! 1

ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த, எவ் உருவும் தன் உரு ஆய்,
ஆர்கலி சூழ் தென் இலங்கை, அழகு அமர் வண்டோதரிக்கு,
பேர் அருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை;
சீரிய வாயால், குயிலே! தென் பாண்டி நாடனை; கூவாய்! 2

நீல உருவின் குயிலே! நீள் மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும் கொடி மங்கை உள்ளுறை கோயில்,
சீலம் பெரிதும் இனிய திரு உத்தரகோசமங்கை,
ஞாலம் விளங்க இருந்த நாயகனை, வரக் கூவாய்! 3

தேன் பழச் சோலை பயிலும் சிறு குயிலே! இது கேள் நீ,
வான் பழித்து, இம் மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்ட வள்ளல்;
ஊன் பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வு அது ஆய ஒருத்தன்;
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை; நீ வரக் கூவாய்! 4

# சொல் இலக்கணம்

ஒரு எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ ஒரு பொருளைத் தருவது சொல் எனப்படும்.

(எ-டு) கை, பூ, தீ, தா – ஓரெழுத்துச் சொற்கள்

மண், வானம் – பல எழுத்துச் சொற்கள்

**பதம்**

சொல்லைப் பதம் என்றும் கூறுவர்.பதம் என்பது

- பகுபதம்
- பகாப்பதம்

என இருவகைப்படும்

**பகுபதம்**

பிரிக்க இயன்ற சொற்கள், அதாவது பிரித்தாலும் பொருள் தருகின்ற சொற்கள் பகுபதம் எனப்படும்.

(எ-டு) படித்தேன் = படி + த்+ த்+ஏன்

**பகாப்பதம்**

பிரிக்க இயலாத அதாவது பிரித்தால் பொருள் தராத சொற்கள் பகாப்பதம் எனப்படும்.

(எ-டு) மரம், கண், சட்டம்

**பகுபத உறுப்புகள்**

பகுபதத்தை ஆறு உறுப்புகளாகப் பிரிப்பர்.

**அவை:**

1 பகுதி

2 விகுதி

3 இடைநிலை

4 சாரியை

5 சந்தி

6 விகாரம்

இவற்றைப் பகுபத உறுப்புகள் என்பர்.

**பகுதி**

பகுபதத்தின் முதற்பகுதி பகுதியாகும்.அது முழுப் பொருளையும் கொடுக்கும்.

**விகுதி**

பகுபதத்தின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை உணர்த்தும்.

**இடைநிலை**

பகுபதத்தின் , பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று , காலத்தைக் காட்டும்.

**சாரியை**

பகுபதத்தின் விகுதிக்கு முன்னும் இடைநிலைக்குப் பின்னுமாக நிற்கும். இது விகுதியைச் சார்ந்து வருவதால் சாரியை எனப்படும்.

**சந்தி**

பகுபதத்தின் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு சந்தி எனப்படும்.

**விகாரம்**

பகுபதத்தின் சந்தியாக வரும் எழுத்து திரிந்து இன்னொரு எழுத்தாக மாறுவது விகாரம் எனப்படும்.

**பகுபத உறுப்புகளுக்கு எடுத்துக் காட்டு**

நடந்தனர்

நட+ந் (த்)+த்+அன்+அர்

நட – பகுதி

ந் - 'த்' 'ந்' தாக மாறியுள்ளது.எனவே இது விகாரம்.

த் - சந்தி

த் - இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**சொற்களின் வகைகள்**

தமிழில் சொற்கள் இலக்கண வகையில் நான்கு வகைப்படும்.

**அவை**:

1 பெயர்ச் சொல்

2 வினைச்சொல்

3 இடைச் சொல்

4 உரிச்சொல்

**பெயர்ச் சொல்**

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல். பெயர்ச் சொல் எனப்படும்.இஃது ஆறு வகைப்படும்.

**அவை:**

1 பொருட் பெயர் – பம்பரம், புத்தகம்

A2 இடப் பெயர் - வீடு, நகரம், தெரு

3 காலப் பெயர் - காலை, மாதம், ஆண்டு

4 சினைப் பெயர் - கை, கால், இலை, காய்

5 குணப் பெயர் - நன்மை, கருமை

(பண்புப் பெயர்)

6 தொழிற் பெயர் - படித்தல், நடித்தல்

**வினைச்சொல்**

ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.இது

- முற்று

- எச்சம்

என இரு வகைப்படும்.

**முற்று**

செயல் முடிவு பெற்றதைக் குறிக்கும் சொல் வினைமுற்று எனப்படும்.

(எ-டு) வந்தான்

வினைமுற்றானது,

- தெரிநிலை வினைமுற்று
- குறிப்பு வினைமுற்று

என இரு வகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று**

ஒரு வினைமுற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம் ,செய்பொருள் என்னும் ஆறையும் உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று ஆகும்.

(எ-டு) அமுதன் ஓவியம் வரைந்தான்

இதில் , செய்பவன் – அமுதன்

கருவி - தூரிகை அல்லது எழுதுகோல்

செய ல் - வரைதல்

காலம் - இறந்த காலம்

செய்பொருள் – ஓவியம்

**குறிப்பு வினைமுற்று**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றி , செய்பவன் ,கருவி, நிலம்,செயல் ,காலம், செய்பொருள் என்னும் ஆறினுள் செய்பவனாகிய கருத்தாவை மட்டும் விளக்குவது குறிப்பு வினைமுற்று ஆகும்.இது காலத்தை வெளிப்படையாக உணர்த்தாது.

(எ-டு) பொன்னன் - பொருள்

பெங்களூரான் - இடம்

கார்த்திகா - காலம்

மூக்கன் - சினை

வெள்ளையன் - குணம்

தச்சன் - தொழில்

**எச்சம்**

பொருள் முடிவு பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும்

இது ,

- பெயரெச்சம்,
- வினையெச்சம்

என்று இருவகைப்படும்.

## பெயரெச்சம்

ஒரு எச்சவினைச்சொல் ,பெயர்ச்சொல்லை ஏற்று முடிவு பெறுவது பெயரெச்சம் எனப்படும். இது இருவகைப்படும்.

**அவை**:

- தெரிநிலைப் பெயரெச்சம்
- குறிப்புப் பெயரெச்சம்

**தெரிநிலைப் பெயரெச்சம்**

ஒரு எச்சவினைச்சொல், காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று , அறுவகைப் பெயர்களுள் ஒன்றினை ஏற்று முடிவது, தெரிநிலைப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு)

வந்த பையன்

வருகின்ற பையன்

வரும் பையன்

இத்தொடர்களில் வந்த, வருகின்ற, வரும் என்னும் சொற்கள், பொருள் முடிவு பெறவில்லை.அவை முறையே முக்காலத்தையும், வருதல் என்ற செயலையும் உணர்த்தி நின்று , பையன் என்னும் பெயர்ச் சொல்லை ஏற்று முடிந்துள்ளன.

**குறிப்புப் பெயரெச்சம்**

ஒரு எச்சச்சொல், காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச் சொல்லை ஏற்று முடிவது, குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு)

நல்ல மனிதன்

அழகிய வீடு

**எதிர்மறைப் பெயரெச்சம்**

பொருள் முடிவு பெறாத பெயரெச்சம், எதிர்மறைப் பொருளை உணர்த்தினால் அது எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு) படிக்காத பையன்

பேசாத கிளி

இத்தொடர்களில் உள்ள படிக்காத, பேசாத என்ற பெயரெச்சங்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்தி நின்று பெயரைக் கொண்டு முடிந்து உள்ளமையால் இவை எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஆகும்.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

பொருள் முடிவு பெறாத பெயரெச்சம், எதிர்மறைப் பொருளை உணர்த்தி, அதன் இறுதி எழுத்து கெட்டு (இல்லாமல்) வந்தால் அது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

(எ-டு) வாடாப் பயிர், ஆடா மயில்

**வினையெச்சம்**

பொருள் முடிவு பெறாத ஒரு எச்சவினை வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சம் எனப்படும். வினையெச்சம் இருவகைப்படும்.

**அவை**:

- தெரிநிலை வினையெச்சம்
- குறிப்பு வினையெச்சம்

**தெரிநிலை வினையெச்சம்**

ஒரு எச்சவினை, காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவது தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

(எ-டு) படித்து முடித்தான்

**குறிப்பு வினையெச்சம்**

ஒரு எச்சவினை, காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவது குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

(எ-டு )மெல்ல நடந்தான்

**இடைச்சொல்**

தானே தனித்து இயங்காமல் பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.

**அவை:**

- ஐ முதலிய வேற்றுமை உருபுகள்
- கிறு,கின்று போன்ற காலம் காட்டும் இடைநிலைகள்
- தல், அல், மை ஆகிய தொழிற்பெயர் விகுதிகள்
- அத்து, அன்று, அம் போன்ற சாரியைகள்
- ஏ, ஓ, உம், தோறும், தான், என, என்று போன்ற தத்தம் பொருள் உணர்த்தி வருபவை
- மற்று போன்ற அசைச் சொற்கள்
- உவம உருபுகள்
- ஆன்,அன், ஆள், அள், அர்,உ போன்ற பால் உணர்த்தும் விகுதிகள்

(எ-டு)

அவளைக் கண்டேன் - ஐ

நடக்கின்றான் - கின்று

படித்தல் – அல்

நடந்ததன்று – அன்று

வந்தாயே – ஏ

செய்தாயோ – ஓ

வந்ததென்று – என்று

‘மற்று அறிவாய் நல்வினை' – மற்று

தாமரை போன்ற முகம் – போன்ற

படித்தாள் – ஆள்

**உரிச்சொல்**

ஒரு பொருளைக் குறிக்கும் பல சொல்லாகவும், பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் நின்று, கற்றவர்கள் மட்டும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வழங்கும் சொல் உரிச்சொல் எனப்படும்.

(எ-டு)

1. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் – சால, உறு, தவ, நனி, கூர், கழி – இவை மிகுதி என்ற ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

2. பல பொருள் குறித்த ஒரு சொற்கள் – கடி – இச் சொல் , காவல், புதுமை, கரிப்பு போன்ற பல பொருள்களைக் கொடுக்கும்.

தமிழில் சொற்கள் இலக்கிய வகையிலும் நான்கு வகைப்படும்.

**அவை:**

1. இயற்சொல
2. திரிசொல்
3. திசைச்சொல்
4. வடசொல்

**இயற்சொல்**

அனைவருக்கும் பொருள் விளங்கும் தன்மையினைக் கொண்ட சொல் இயற்சொல் எனப்படும்.

(எ-டு) மரம், வானம், காற்று போன்றவை

**திரிசொல்**

கற்றவர்களுக்கு மட்டும் பொருள் விளங்கும் அரிய சொல் திரிசொல் எனப்படும்.இது இருவகைப்படும்.

**அவை:**

- ஒரு பொருள் குறித்த பல சொல்
- பல பொருள் குறித்த ஒரு சொல்

(எ-டு)

- கிள்ளை,தத்தை, சுகம் – இவை கிளி என்னும்

  ஒரு பொருள் குறித்த பல திரிசொல்

- வேழம் – இச் சொல் கரும்பு, மூங்கில், யானை முதலிய

  பல பொருள் குறித்த ஒரு திரிசொல்

**திசைச்சொல்**

எல்லாத் திசைகளிலும் வழங்கும் வேற்று மொழிகளில் இருந்து , தமிழில் வந்து வழங்கும் சொல் திசைச்சொல் எனப்படும்.

(எ-டு). சிக்கு – கன்னடம்

கொக்கு – துளு

ஜன்னல் – போர்த்துகீசியம்

ஆசாமி - அரபு

அந்தோ (ஐயோ) - சிங்களம்

**வடசொல்**

வடமொழியில் இருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் வடசொல் எனப்படும்.இது இருவகைப்படும்.

அவை:

- தற்சமம்
- தற்பவம்

**தற்சமம்**

தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துகளால் ஆகி, தமிழில் வழங்கும் போது எவ்வித மாற்றமும் இன்றி வழங்கும் சொற்கள் தற்சமம் எனப்படும்.

(எ-டு) காரணம், கமலம், குங்குமம்

**தற்பவம்**

வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்துகளால் ஆகி, தமிழில் வழங்கும் போது தமிழ் ஒலி முறைக்கு ஏற்ப மாறி வழங்கும் சொற்கள் தற்பவம் எனப்படும்.

(எ-டு) விசேஷம் – விசேடம்

புத்ர - புத்திரன்

**தொகாநிலைத் தொடர்**

இரண்டு முதலான சொற்கள் தொடர்ந்து வரும் பொழுது சொல்லின் பகுதிகள் தொகாமல் அதாவது மறையாமல் வருவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

**அவை**:

எழுவாய் வேற்றுமைத் தொடர் – அமுதன் வந்தான்

விளி வேற்றுமைத் தொடர் - அமுதா வா

பெயரெச்சத் தொடர் - வந்த அமுதன்

வினையெச்சத் தொடர் - சென்று அடைந்தான்

வினைமுற்றுத் தொடர் - சென்றான் அமுதன்

இடைச்சொல் தொடர் - மற்று ஒருவன்

உரிச்சொல் தொடர் - நனி சிறந்தது

வாழ்க வாழ்க - அடுக்குத் தொடர்

**தொகைநிலைத் தொடர்**

இரண்டு முதலான சொற்கள் தொடர்ந்து வரும் பொழுது உவம உருபு, பண்பு உருபு, வேற்றுமை உருபு போன்றவை தொக்கு அதாவது மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

**அவை:**

வேற்றுமைத்தொகை

வினைத்தொகை

பண்புத்தொகை

உவமைத்தொகை

உம்மைத்தொகை

அன்மொழித்தொகை

**வேற்றுமைத்தொகை**

இரண்டாம் வேற்றுமை முதல் ஆறாம் வேற்றுமை வரை உள்ள உருபுகள் சொற்களுக்கு இடையில் மறைந்து வருவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

(எ-டு)

வீடு கட்டினான் - ஐ மறைந்து வந்துள்ளது.
இரண்டாம் வேற்றுமைத் தொகை

தலை வணங்குகிறேன் – ஆல் மறைந்து வந்துள்ளது
மூன்றாம் வேற்றுமைத் தொகை

எலிப் பகை - கு மறைந்து வந்துள்ளது
நான்காம் வேற்றுமைத் தொகை

ஊர் நீங்கினான் - இன் மறைந்து வந்துள்ளது
ஐந்தாம் வேற்றுமைத் தொகை

அவன் புத்தகம் - அது மறைந்து வந்துள்ளது
ஆறாம் வேற்றுமைத் தொகை

மலைக் கோயில் - கண் மறைந்து வந்துள்ளது
ஏழாம் வேற்றுமைத் தொகை

**வினைத்தொகை**

இரு சொற்களுக்கு இடையில் மூன்று காலமும் மறைந்து வருவது வினைத்தொகை எனப்படும்.

(எ-டு) விளைநிலம்

இதில் விளைந்த நிலம், விளைகின்ற நிலம், விளையும் நிலம் என மூன்று காலமும் மறைந்து வந்துள்ளது.

**பண்புத் தொகை**

இரு சொற்களுக்கு இடையில் பண்பை விளக்குகின்ற ஆகிய, ஆன போன்ற உருபுகள் மறைந்து வருவது பண்புத் தொகை எனப்படும்.

(எ-டு) பைந்தமிழ்

கருங்கடல்

**உவமைத் தொகை**

இரண்டு சொற்களுக்கு இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத் தொகை எனப்படும்.

( எ-டு) கயல் விழி

பவளவாய்

**உம்மைத்தொகை**

இரு சொற்கள் சேர்ந்து வரும் பொழுது இடையில் உம் என்பது மறைந்து வருவது உம்மைத் தொகை எனப்படும்.

(எ-டு) அண்ணன் தம்பி

வெற்றிலை பாக்கு

**அன்மொழித் தொகை**

மேலே குறிப்பிட்ட ஐந்து தொகைகளில் ஒன்று விரிந்த

பின்னரும் பொருள் முடிவு பெறாமல் அவை அல்லாத வேறு மொழி மறைந்து வந்து பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும்.

( எ-டு) கார்குழல் வந்தாள்

இத்தொடரில் கரிய கூந்தலை உடையவள் வந்தாள் என விரியும்.